**DP/AL/2024/2**

எனது எண்: 6/3/AL/2024
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2024 ஜூன் மாதம் 13 திகதி

சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை - 2024

2024 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் இத்துடன் அனுப்பி வைக்கின்றேன். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.07.10 ஆகும்.

(1) நிகழ்நிலை முறைமையில் (online) மட்டும் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தவும்.

(2) விண்ணப்பதாரியின் தகவல்களை தரவுத்தளத்தில் உள்ளடக்குவதற்கு முன்பு உங்கள் பாடசாலையின் சுயவிரைங்கள் (Profile) பாடசாலையின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் கோட்ட/வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய பிராந்தியம், பரீட்சைக்குத் தோற்றும் நகரம் ஆகிய தகவல்கள் இற்றைப்படுத்துவது கட்டாயமானது.

(3) விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது பாடங்களைத் தெரிவுசெய்கையில் பிழையின்றி குறிப்பிடுதல் வேண்டும். பாட எண்ணையோ அல்லது மொழிமூலத்தையோ எக்காரணத்திற்காகவேனும் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பிழையாக பாடத்தை குறிப்பிடுவதனால் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படுகின்ற சகல அசௌகரியங்களுக்கான பொறுப்பை அதிபருக்கு வழங்குவதோடு இந் நடவடிக்கை தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திற்கு ஏற்படுகின்ற மேலதிக செலவுகளும் உரிய அதிபரிடமிருந்து அறவிடப்படும்.

**கவனிக்கவும்:**
பிரதான மொழிமூலமாகிய தமிழ்/சிங்கள மொழிமூலத்தில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழிமூலத்தில் அனுமதிக்கப்பட்ட சில பாடங்களுக்கு தோற்றுவதற்கு கல்விச் செயலாளரின் 2008/43 சுற்றுநிருபத்தின் 4ஆம் பிரிவிற்கமைய அனுமதிக்கப்பட்டுள்ளது.

(4) கடந்த வருடம் உமது பிரிவேனா / பாடசாலைப் பரீட்சார்த்திகள் தோற்றிய பரீட்சை நிலையத்திலும் பார்க்க வசதி கூடிய பரீட்சை நிலையமொன்று நீங்கள் குறிப்பிட்டுள்ள நகரத்தில் இருப்பின் அதை மாற்றித்தருமாறு உமது வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் கூடிய வேண்டுகோள் கடிதமொன்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(5) விண்ணப்பதாரிகளின் **முழுப்பெயர், விண்ணப்பித்த பாடங்கள், மொழிமூலம்** ஆகிய சகல தகவல்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவாவென சரிபார்க்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குக. நிகழ்நிலை முறைமையில் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் PDF Format ஐ அச்சுப் பிரதியெடுத்து அதில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென உறுதிசெய்து மாணவரிடம் கையொப்பங்களைப் பெற்று, அதிபர் கையொப்பமிட்டு பாதுகாப்பாக பாடசாலையில் வைத்துக் கொள்ளவும். இவ்விண்ணப்பப்படிவத்தை பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் அப்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக 'Special Education Need Students' 'Additional Data' இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

- இரத்மலான கண்பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலான
- பொலம்மாறுவ கண்பார்வையற்ற / செவிப்புலனற்றோர் பாடசாலை, தங்காலை,

வேறு பொருத்தமான இடங்களிலும் விசேட பரீட்சை நிலையங்களால் அமைக்கப்படுமாகையால் அந்நிலையத்தில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் தொடர்பாக விசேட வேண்டுகோளொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

(7) ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தையோ மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இவை தவிர வேறு எந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகையினால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.

**<u>கவனிக்கவும் :-</u>**
**இப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவுள்ள தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாக வருகைதந்து தற்காலிக தேசிய அடையாள அட்டை இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். அதற்காக வெளிநபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்துவது முற்றாக தடை செய்யப்படுவதுடன் அவரது விண்ணப்பம் நிராகரிப்பதற்கான காரணமாகவும் இது அமையும்.**

(8) பரீட்சைக்குத் தோற்றும் தடவை

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கேனும் தோற்றாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்தி எனக் கருத்திலெடுக்கப்படுவார். அவ்வாறான விண்ணப்பதாரிகள் இருப்பின் அவர்கள் பாடசாலையிலிருந்து முதற்தடவையாக தோற்றுகின்ற விண்ணப்பதாரியாக கணிக்கப்பட வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றினாலும் தோற்றாவிட்டாலும் க.பொ.த. உயர்தர வகுப்பில் மூன்று வருடங்களுக்கு மேல் பாடசாலையிலிருப்பவர்கள் பாடசாலைப் பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்ற முடியாது. பாடசாலையிலிருந்து விலகி பாடசாலை விடுகைப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரமே தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்ற முடியும். பாடசாலையில் கற்றுக் கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பவர்கள் அல்லது பரீட்சைக்குத் தோற்ற முயற்சி செய்கின்ற மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடைவிதிக்கப்படுவதுடன் பெறுபேறுகளை இடைநிறுத்தவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

(9) நிகழ்நிலை முறைமையில் (online) உள்ளடக்குவது தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் இத்துடனுள்ள இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது. மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல் முகவரி - gcealexam@gmail.com

தொலைபேசி இலக்கம் - 011-2784208
011-2784537
011-2786616

தொலைநகல் இலக்கம் - 011-2784422

நிகழ்நிலை அலகு - 011-3671568
011-3661122

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

D:\New Volume\A\2024\AL\Principal\DP-AL-2024-2.doc

## விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வழிகாட்டல்

1. முறைமைக்குள் (System) நுழைதல்

1.1 விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" என்பதின் கீழுள்ள ' Exam Information Centre" ஐ Click செய்த பின்பு G.C.E. (AL) – 2024 - Student Registration (School) Click செய்தோ அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" ஐ Click செய்க. அல்லது
- https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

1.2 G.C.E. (AL) – 2024 - Student Registration (School) ஐத் தெரிவு செய்க.

1.3 கிடைக்கப்பெறும் School Account Login இல் தங்களுக்கு இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பயநர் பெயர், கடவுச்சொல் (School Code, Password) ஆகியவற்றை உள்ளடக்கி முறைமைக்குள் நுழைக. உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்ட School Code, Password தொலைத்திருப்பின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்க.

2. பாடசாலையின் அடிப்படை விவரங்களை இற்றைப்படுத்தல்

2.1 பாடசாலையின் அடிப்படை விவரங்களை பூர்த்தி செய்வதற்காக இடப்பக்கத்திலுள்ள School ஐத் (icon) தெரிவு செய்க.

2.2 இங்கு தங்கள் பாடசாலைக்குரிய தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், அங்கு தகவல்களை புதிதாக உள்ளடக்கவோ அங்கு தரப்பட்டுள்ள தகவல்களில் திருத்தங்கள் மேற்கொள்ளவோ School Information Tab ஐ Click செய்க. கிடைக்கப்பெறும் படிவத்தில் தகவல்கள் அனைத்தும் சரியாக பூர்த்தி செய்வதற்கு Save Information பொத்தானை Click செய்யவும்.

2.3 பாடசாலைப் பரீட்சார்த்திகளின் தகவல்களை உள்ளடக்குவதற்காக GCE (AL) Examination - 2024 கீழுள்ள Instruction (Button) பொத்தானை தெரிவு செய்யவும்.

2.4 அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து குறும் காணொளியை (Video Clip) பார்த்த பின்னர் Next (Button) பொத்தானை தெரிவு செய்யவும்.

3. விண்ணப்பதாரர்களின் விவரங்களை உள்ளடக்குதல்.

3.1 முதலாவது செயன்முறை - சகல பரீட்சார்த்திகளின் தகவல்களை ஒரே தடவையில் உள்ளடக்குதல்

I. Bulk Upload ஐ Click செய்யவும்.
II. Download Excel Template ஐ Click செய்யவும்.
III. தரவிறக்கிய (Download) Excel தளத்தில் விண்ணப்பதாரிகளுக்குரிய தகவல்களை வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பூரணப்படுத்துக.
IV. பூணப்படுத்தப்பட்ட Excel தளத்தை Save செய்து கொள்க.
V. Browse ஐ பயன்படுத்தின் Save செய்த File ஐ சரியாக தெரிவு செய்க. upload பொத்தானை பயன்படுத்தி தெரிவு செய்த File ஐ பதிவேற்றம் (Upload) செய்யவும்.
VI. சரியான தகவல்களை பதிவேற்றம் செய்த பின்னர் தகவல் ஒன்று கிடைக்கப்பெறும். அவ்வாறு கிடைக்கப்பெறாவிடின் கோப்பு மாதிரியை (File) அல்லது உள்ளடக்கிய விவரங்களை மீண்டும் பரிசோதித்து பார்க்கவும்.

3.2 இரண்டாவது செயன்முறை - ஒவ்வொரு பரீட்சார்த்திகளினதும் விவரங்களை வெவ்வேறாக உள்ளடக்குதல்

I. Add Candidates ஐ Click செய்யவும்.
II. கிடைக்கப்பெறும் windows இல் விண்ணப்பதாரிகளின் தகவல்களை உள்ளடக்கவும்.
III. Date of Birth ஐ பூரணப்படுத்துவதற்காக தெரிவு செய்யும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.
IV. அடுத்த விண்ணப்பதாரி தொடர்பான தகவல்களை பூரணப்படுத்துவதற்கு Save Information ஐ Click செய்யவும்.
V. இதுவரை உள்ளடக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் சகல தகவல்களும் தங்களுக்கு காட்சிப்படுத்தப்படும்.

4. **Add subject Infomation**

2024 ஆம் ஆண்டு பரீட்சைக்கு அங்கீகரிக்கப்பட்ட பாடங்களும் மொழிமூலங்களும்

4.1 கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26 ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் “குறித்த பாடத்துறை ஒன்றில் அடங்காத” (Non stream) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் “நாடளாவிய தரம் (Island Rank) மற்றும் “மாவட்ட தரம்” (District Rank) வெளியிடப்பட மாட்டாது. அச்சுற்றுநிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்க வேண்டியேற்படும் பிரச்சினைகள் தொடர்பான பொறுப்புகளை இத் திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது என்பதை கவனத்திற் கொள்ளவும். இப்பரீட்சார்த்திகள் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பாடப்பட்டியலிலிருந்து தமது பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். இப்பரீட்சைக்கு மூன்று பிரதான

பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டியதோடு பல்கலைக்கழகமொன்றில் அனுமதிக்காக எதிர்பார்த்திருப்பின் பொது சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுதல் வேண்டும். மேற்படி பாடங்களுக்கு மேலதிகமாக பாட எண் 13 பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

4.2 தேவையாயின் இரு மொழிமூலத்திலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

- சிங்களம் / ஆங்கிலம்
- தமிழ் / ஆங்கிலம்

இரண்டு மொழிமூலங்களில் தோற்றும் சந்தர்ப்பத்தில் பிரதான மொழிமூலமாக சிங்களம் / தமிழை தெரிவு செய்ய வேண்டும். எக்காரணத்தின் பொருட்டும் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களிலும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.

4.3 **மிகமுக்கியம் :**

i. பௌதிக விஞ்ஞான பாடத்துறையின் கீழ் 07 - கணித பாடத்தைத் தெரிவுசெய்ய முடியாது.
ii. பாட இல 14, 15, 16, 17, 18, 19 ஆகிய பாடங்களுள் **ஒன்றிற்கு** மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
iii. (65) பொறியியற் தொழில்நுட்பவியல் மற்றும் (66) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய இரண்டு பாடங்களிலும் ஒரு பாடத்திற்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
iv. (65) பொறியியற் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ (66) உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கோ விண்ணப்பிப்பவர்கள் மாத்திரம் (67) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.
v. சமயம் மற்றும் நாகரிகம் ஆகிய பாடங்களில் ஏதாவதொரு சமயத்தினை பரீட்சார்த்தி தெரிவு செய்வாராயின் அதனோடு தொடர்புபட்ட நாகரிகப் பாடத்தினை அவர் தெரிவு செய்ய முடியாது. அதே போன்று நாகரிகப்பாடத்தினை தெரிவு செய்வாராயின் அதனுடன் தொடர்புடைய சமய பாடத்தை தெரிவு செய்ய முடியாது.
vi. நடனம் - பாட இல 52 இற்கு விண்ணப்பிக்கும்போது நீங்கள் கற்ற நடன வகையைக் குறிப்பிடவும். **(இது செய்முறைப் பரீட்சைக்கு மட்டுமே இது வகைப்படுத்தப்படும்)**
vii. 54 - கீழைத்தேய சங்கீத பாடம் சிங்கள மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
viii. 55 - கர்நாடக சங்கீத பாடம் தமிழ் மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
ix. 56 - மேலைத்தேய சங்கீத பாடம் ஆங்கில மொழி மூலத்தில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
x. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை பின்னர் மாற்றம் செய்வதற்கோ அல்லது பரீட்சை மண்டபத்தில் பாட மாற்றங்கள் செய்வதற்கோ அல்லது மேலதிக பாடங்களுக்குத் தோற்றுவதற்கோ இடமளிக்கப்படமாட்டாது. அவ்வாறு மாற்றம் செய்து தோற்றியிருப்பின் அப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இரத்துச்செய்யப்பட வேண்டி நேரிடும்.

4.4 **Common General Test**

சாதாரண பொதுப் பரீட்சை : விண்ணப்பிப்பதாயின் Common General Test எதிரேயுள்ள Yes ஐத் தெரிவு செய்து மொழிமூலத்தையும் தெரிவு செய்க. (இரண்டாவது தடவையாக தோற்றும் விண்ணப்பதாரியாயின் இதற்கு முன்னர் தோற்றி 30 அல்லது 30இற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றிருப்பாராயின் மீண்டும் தோற்ற வேண்டிய அவசியமில்லை.

4.5 **General English**

பொது ஆங்கிலம் : விண்ணப்பிப்பதாயின் General English எதிரேயுள்ள Yes ஐத் தெரிவு செய்க.

4.6 பாடங்களைத் தெரிவு செய்த பின்னர் உரிய பாடங்களுக்கு உரித்தான பாடத்துறை (Stream) உங்களுக்கு திரையில் காட்டப்படும். **அது தொடர்பாக உங்கள் அவதானத்தை செலுத்தவும்.**

5. **இதுவரை உள்ளடக்கப்பட்ட விண்ணப்பதாரியின் தகவல்களை மாற்றம் செய்தல்**
உரிய விண்ணப்பதாரியின் பெயருள்ள நிரலில் "Edit" ஐ Click செய்யவும்.

6. **விண்ணப்பதாரியின் தகவல்களை முழுமையாக நீக்குதல்**
விண்ணப்பதாரியின் பெயருள்ள நிரலில் "Delete" ஐ Click செய்யவும்.

7. **விசேட தேவையுள்ள பரீட்சார்த்தியின் விவரங்களை உள்ளடக்குதல்.**

7.1 விசேட தேவையுடைய பிள்ளைகளின் விவரங்களை திரையில் மேற்பக்கத்தில் special Needs Students' Additional Data இலுள்ள Go to Data Form ஐ Click செய்க.

7.2 ஒவ்வொரு விண்ணப்பதாரியின் எதிரேயுள்ள "Edit" ஐ பயன்படுத்தி உரிய விண்ணப்பதாரியின் தனிப்பட்ட முகவரி (Private address), செல்லிடத் தொலைபேசி எண் (Mobile phone number) குறைபாட்டின் தன்மை (Disability type), அது தொடர்பான விவரங்கள் (Details of disability), விசேட பரீட்சை நிலையங்களுக்கு விண்ணப்பதாயின் அவற்றின் பெயர் (If special center required) என்பவற்றை பூர்த்தி செய்க.

8. **விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியெடுத்தல்**

- தங்கள் பாடசாலையின் சகல விண்ணப்பதாரர்களின் விவரங்களும் சரியாக உட்புகுத்தப்பட்டுள்ளனவா என சரிபார்த்து உறுதிப்படுத்திய பின்னர் Print Data Form ஐ Click செய்யவும்.
- கிடைக்கப்பெறும் Pdf கோவையை சரிபார்த்து பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டு அச்சுப் பிரதியெடுத்துக் கொள்க.
- பிழைகள் ஏதுமிருப்பின் திருத்தம் செய்வதற்கு (Edit)ஐப் பயன்படுத்தி சரிசெய்து கொள்க.